OS.No. 144/2023

C/w OS.No. 160/2022

Date : 25.11.2025

Witness Name & Rank – செந்தில் - PW1

**சாட்சி அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

1. நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் எட்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது பிரதான தொழில் எது என்றால் கூலி வேலை செய்து வருகிறேன். எனக்கு நிரந்தரமான தொழில் கிடையாது என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் அசல் ஆவணங்கள் அல்ல நோட்டரி வழக்கறிஞரின் சான்று பெறப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் என்றால் சரியல்ல. நான் சில ஆவணங்கள் நோட்டரி வழக்கறிஞரின் சான்று பெற்று தாக்கல் செய்துள்ள நிலையில் அதன் அசல் ஆவணங்கள் ஏன் தாக்கல் செய்யப்படவில்லை என்ற காரணத்தை எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனவே மேற்படி ஆவணங்கள் ஆவண சாட்சியமாக ஏற்றுக்கொள்ள முடியாது என்றால் சரியல்ல. நான் ஒன்றாம் பிரதிவாதியிடம் கடை வாடகைக்கு வேண்டும் என்று முதன் முதலில் எப்போது அணுகினேன் என்றால் 2019 ல் அணுகினேன்.
2. 2019 காலத்திற்கு முன் வாடகை தொடர்பாக எந்த விதமான பழக்கமும் பிரதிவாதியிடம் எனக்கு இல்லை என்றால் சரிதான். எனவே வா.சா.ஆ. 1 கடையில் பதிவு சான்றானது 17/10/2018 என குறிப்பிட மேற்படி வா.சா.ஆ 1 ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ 1 பதிவு சான்றின்படி எனது கடை முகவரியானது வழக்கு சொத்திற்கானது என்றால் சரிதான். நான் 2018 காலத்தில் பிரதிவாதியான ஜோதியிடம் 11 மாத காலத்திற்குத்தான் வாடகை ஒப்பந்தம் போட்டு தான் மேற்படி பதிவு சான்று வா.சா.ஆ 1 பெற்றேன் என்றால் சரியல்ல. அதன் பிறகு நானே மோசடியாக போலி ஆவணம் ஒன்றை தயார் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 5 பிரதிவாதிகள் பெயரில் வாங்கப்படவில்லை என்றால் சரிதான். இந்த வாடகை ஒப்பந்தத்திற்கு முன்பே ஒரு வாடகை ஒப்பந்தம் போடப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு இதற்கு முன்பு போடப்பட்ட வாடகை ஒப்பந்தத்தை பற்றி

எனது வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை அதேபோல் அந்த வாடகை ஒப்பந்தம் ஆவணம் சான்றாவனமாக இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. மேற்படி வா.சா.ஆ 5 வாடகை ஒப்பந்தத்திற்கு முன்னர் போடப்பட்ட வாடகை ஒப்பந்தமானது எவ்வளவு காலத்திற்கு போடப்பட்டது என்றால் 11 மாதத்திற்கு போடப்பட்டது. பிரதிவாதிகள் மேற்படி 11 மாத காலம் முடிந்த பிறகு என்னை காலி செய்ய சொன்னார்கள் என்றால் இல்லை. வா.சா.ஆ 5 வாடகை ஒப்பந்தத்தில் உள்ள கையொப்பம் பிரதிவாதி உடையது அல்ல மேற்படி பிரதிவாதிகள் முதலில் போட்ட வாடகை ஒப்பந்தத்தின் காலம் முடிந்த பிறகு என்னை காலி செய்ய சொன்ன நிலையில் நானாக போலியாக தயாரித்த ஆவணத்தை வா.சா.ஆ 5 என் சார்பில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ 5 வாடகை ஒப்பந்தத்தை யார் தட்டச்சு செய்தது யார் தயாரித்தது எங்கு தயாரிக்கப்பட்டது என்று எந்த விதமான குறிப்பும் அந்த ஆவணத்தின் இல்லை என்றால் சரிதான் வா.சா.ஆ 5 வாடகை ஒப்பந்தத்தில் சாட்சி கையொப்பம் செய்த பொன் மணிகண்டன் மற்றும் ஈஸ்வரன் ஆகியோர் யார் என்றால் இருதரப்பினருக்கும் தெரிந்த நபர்கள் ஆவார்கள் மேற்படி நபர்களின் கையொப்பத்தை எங்கு வைத்து பெறப்பட்டது என்றால் சாட்சிகளின் வீடுகளுக்கு சென்று பெறப்பட்டது மேற்படி சாட்சி கையொப்பத்தை யார் சென்று வாங்கி வந்தது என்றால் நான்தான் சென்று வாங்கிக் கொண்டு வந்தேன்.

4. மேற்படி சாட்சிகள் தாவா சொத்தில் இருந்து எவ்வளவு தூரத்தில் வசித்து வருகிறார்கள் என்றால் ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் வசித்து வருகிறார்கள். எனது வழக்குரையில் முதலில் போடப்பட்ட வாடகை ஒப்பந்தத்தை பற்றி சொல்லாமல் இருப்பதற்கு ஏதேனும் காரணம் உண்டா என்றால் எதுவுமில்லை. மேற்படி எனது கடையானது பஞ்சுகளை வாங்கி கால்நடைகளுக்கு சிறுக விற்பனை செய்வது என்றால் சரிதான். நான் வாடகைக்கு உள்ள கடையானது தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது என்றால் சரிதான். நிறுவன சட்டத்தின் கீழ் இந்த கடை பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கு உண்டான ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எனது கடையில் நிறைய நபர்கள் வேலை செய்வதாக சொல்லி உள்ள நிலையில் அதற்கு உண்டான ஆவணங்கள் எதுவும் தாக்கல்

செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

5. பொதுவாக 11 மாத காலத்திற்கு மேல் வாடகை ஒப்பந்தம் போடப்பட வேண்டும் என்றால் அந்த ஆவணம் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட வேண்டும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2022 ஆம் ஆண்டு எனக்கு இடத்தை காலி செய்ய சொல்லி சட்ட அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். அதற்கு நான் எந்தவிதமான பதில் அறிவிப்பும் தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது, பதில் அறிவிப்பு அனுப்பவில்லை. நான் வங்கியில் கடன் வாங்குவதற்கு விண்ணப்பித்ததாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ள நிலையில் அவ்வாறு கடன் வாங்குவதற்கு முன்பே பிரதிவாதிகளிடம் அனுமதி எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். மேற்படி எங்களுக்குள் குற்ற வழக்குகள் இன்னும் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி கடையில் தராசு தவிர வேறு கனரக பொருட்கள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு சொத்தில் நான் எண்ணெய் ஆட்டக்கூடிய மரச்செக்கு இயந்திரம் வைத்துள்ளேன் என்றால் சரிதான். அதுபோல உணவுப் பொருள்களை அரைக்கும் அரவை மெஷின்களை வைத்துள்ளேன் என்றால் சரிதான். அதேபோல் கால்நடைகளுக்கு உணவாக தரப்படும் வைக்கோல்களை முன்புறம் வைத்து வியாபாரம் செய்து வருகிறேன் என்றால் சரிதான் . 2018 இல் பிரதிவாதிகளுடன் நான் போட்ட 11 மாத வாடகை ஒப்பந்தத்தின் படி பஞ்சு கடை மட்டுமே வைத்து தொழில் செய்வதாக சொன்ன நிலையில் மேற்படி கடையில் நான் செய்யும் தொழில்களுக்கும் பிரதிவாதிகளுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை அவர்கள் அதற்கு அனுமதி அளிக்கவில்லை எனவே அவர்களது வழக்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல. வா.சாஆ. 5 வாடகை ஒப்பந்தமானது என்னால் போலியாக தயாரிக்கப்பட்டது எனவே அது ஏற்றுக் கொள்ளக் கூடியது அல்ல என்றால் சரியல்ல.

6. 2018 இல் நான் பிரதிவாதியுடன் போட்ட 11 மாத வாடகை ஒப்பந்தம் என் வசம் இருந்தும் அது தாக்கல் செய்யாதது வா.சாஆ. 5 என்னால் தயாரிக்கப்பட்ட வாடகை ஒப்பந்தத்தை வலுப்படுத்தவே எனவே எனது மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. 2018 போடப்பட்ட வாடகை ஒப்பந்த காலத்தை தாண்டி இதுவரை நான் பிரதிவாதிகளுக்கு வாடகை தரவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்த காலம் முதல் தற்போது வரை

வாடகை தரவில்லை. நான் எதனால் இன்றுவரை வாடகை தரவில்லை என விவரத்தை எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லி உள்ளேனா என்றால் இல்லை. ஆனால் இன்று வரை கடை நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். 2018 இல் எங்களுக்குள் ஏற்படுத்தப்பட்ட வாடகை ஒப்பந்தத்தின்படி வெறும் பதினோரு மாதம் மட்டுமே வாடகை செலுத்தி அதன் பிறகு இன்று வரை நான் கடைக்கு வாடகை செலுத்தவில்லை மேற்படி கடையானது தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது எங்களுக்குள் எந்த விதமான வாடகை ஒப்பந்தமும் அமலில் இல்லாத நிலையும் நான் சட்டப்படி வெளியேற்ற வேண்டிய நபர் எனவே பிரதிவாதிகள் தாக்கல் செய்த வழக்கு அனுமதிக்கப்பட்டு நான் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. வா.சாஆ. 5 ல் பிரதிவாதி எந்த காலத்திலும் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்யக்கூடிய ஆவணம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல, வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

| |
|---|
| சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது<br><br><br>(Sd/–)K.Yuvaraj,B.A.,B.L.,<br>சார்பு நீதிபதி, பல்லடம். |